181461

# ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம்

Q23:417x1
N11
181461

14 FEB 1911
MADRAS

உ

திருச்சிற்றம்பலம்.



# ஸ்ரீ- சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம்.

சேலம் - திருவள்ளுவ நாயனார் சங்கத்தலைவர்
ம-ா-ா-ஸ்ரீ
அ. குழந்தையானந்த நாயனார்
விருப்பின்படி ஷை சங்கத்து உபதலைவர்,
நெ. மு. ஷ. ஷண்முகசுந்தர நாயனாரால்
எழுதியது.

நாயனார் அச்சுக்கூடம்,
பழைய வண்ணாரப்பேட்டை
சென்னை.
9-2-11

---

விலை அணா 1.

O23:4170
N11.
18786

MADRAS

உ

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீ-சுந்தரமூர்த்தி சுவாமிகள்

# சரித்திரம்.

### விநாயகர் துதி.

வானுலகு மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வா
யானைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம்.

### சபாநாதர் துதி.

சீராருஞ் சதுர்மறையுந் தில்லைவா ழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியுந் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலா மீடேற
வேராரு மணிமன்று ளெடுத்ததிரு வடிபோற்றி.

## சைவசமயாசாரியர் துதி.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
யாழின்மிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

## திருத்தொண்டர்கள், சேக்கிழார் சுவாமிகள்.

தில்லைவா ழந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
யொல்லையவர் புராணகதை யுலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழா ரடிபோற்றி.

## சுந்தரமூர்த்தி நாயனார் துதி.

அரவக லல்கு லார்பா லாசைநீத் தவர்க்கே வீடு
தருவமென் றளவில் வேதஞ் சாற்றிய தலைவன் றன்னைப்
பரவைதன் புலவி தீர்ப்பான் கழுதுகண் படுக்கும் பானு
ளிரவினிற் றூது கொண்டோ னிணையடி முடிமேல்வைப்பாம்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடலின்மகிமை.

வெங்கராவுண்ட பிள்ளையை நல்குமே
வெள்ளைவாரண மீதிலிருத்துமே
மங்கை பர்கரைத் தூதுநடத்துமே
மருவியாறு வழிவிட்டு நிற்குமே
செங்கலானது தங்கம தாகுமே
திகழுமாற்றிட்ட செம்பொன் னளிக்குமே
துங்கவாம்பரி சேரற்கு நல்குமே
துலங்குநாவலூர்ச் சுந்தரர் பாடலே.

18146

தேவாசுரர்க ளொருங்குசேர்ந்து திருப்பாற் கடலைக் கடைந்த காலத் ததிலிருந் தியாவரையுந் தகிக்க வெழுந்த ஆலாலம் என்னுங் கடுவை யற்பகடு கெனத் தந்திருக் கரத்திற் ருங்கி யருளிய ஆலாலசுந்தரர் என்னுஞ் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஸ்ரீ கைலாயத்தில் சிவபெருமானுக்குத்திருமாலை தொடுத்து சாத்துதற்கு நந்தவனத்திற் சென்று நறுமாமலர் கொய்யுங்கால், உலகமாதாவாம் உமையம்மையாரின் சேடிகள் அநிந்ததை, கமலினி யென்னு மிருவர் அம்மையாருக்கு புட்பமாலை புனையவேண்டி ஆங்குற அவர்களைக்கண்ட ஆலால சுந்தரர் சிறிது மயங்கி சித்தத்தைச் சிவன்பால் வைத்த சீரினல் நீர்கிழிய வெய்தவடுப்போல் அம்மயக்கை திரணமெனச் செய்து சிவ சந்நிதியை யடைந்தார்.

எப்பொருட்கு மிறைவனுகிய எம்பெருமான் பகவான் இதை யுணர்ந்து கோட்டுப்பூ, கொடிப்பூ, முதலிய புட்பங்களுடன் தம் பாலுற்ற சுந்தரரை நோக்கி, ஹே! சுந்தரா! நீ பார்வதியின் சேடியரிருவர்மீது பக்ஷமுற்றமையால் பூலோகத்தில் தோன்றி உன்னிமித்தந் தோற்றுமவர்களை மணந்து இன்ப மனுபவிக்கக் கடவாயென, இதைக் கேட்டருளிய சுந்தரர் இடிவீழ்ந்த பனையென இதைய மிளைத்து எங்கோனே! எவர்க்கு முதல்வனே! எவருஞ் சகித்தற்கரிய இக்கொடுஞ் சாபம் எளியேனு லேற்க வியலுமோ! இடர்க்கடல் கடத்தும் எம்பிரானே! என்று பலவாறு இறைஞ்சி றைஞ்சி திருவுளப்பாங் கட்படியே யாயின் தெய்வமே! சிறியேனுற் செய்வதியாதுளது! எம்பெருந் தெய்வமே! தேவரீருடைய திருவுளப்படியே யான் பூவுலகிற் ஜனித்து விதிநிஷேத மறியாது விழுங்கால் தேவரீர் இங்காயேனைத் தடுத்தாட் கொள்ள வேண்டுமெனத் தத்தளித்தயர்ந்து நிற்கையில், பச்சிலையிடினும் பக்தர்க்கிரங்கும் முக்திநாதன் திருவுள மிரங்கி சுந்தரா! அஞ்சேல்! அஞ்சேல்! அப்படியே தடுத்தாட்கொள்வோ மென் றபயாஸ்த மருளினர்.

பிறகு சுந்தரமூர்த்தி சுவாமிகள், சோமசுந்தரர் திருவருளினல் தற்காலம் பண்[illegible]ருட்டி ரெயில்ஸ்டேஷனுக்கு மேற்கில் 11-வது மைலில் திரு[illegible] நல்லூரென்னும் திருநாவலூர் திவ்யக்ஷேத்

18146

025: 41724 N11

கிரத்தில், ஆதிசைவோத்தம பிராமணராகிய சடையனாருக்கும், இசைஞானியாருக்குந் திருவவதரித்து நம்பியாரூரர் என்னும் நந்நாமந்தாங்கிப் பல சிறாருடன் கோடானுகோடி நக்ஷத்திரக் கூட்டங்களுள் ஒப்பற்ற பூரண சந்திரனைப்போற் பொலிந்து திருநாவலூர் திருவீதியில் விளையாடிக் கொண்டிருக்கையில், அவ்வழியாய் வந்த அத்திருநகரரசப் பெருமானாகிய நரசிங்கமுனையரையர் இத்திருப் புதல்வரைக் கண்டு ஆனந்த சாகரத்தழுந்தி இவரைத் தமக்கு மகவாய்வரிக்கக் கருதி இவ ரரும் பிதாவாஞ் சடையனார் சம்மதத்தின் மீது நித்திய தரித்திரன் நிதிக்குவை பெற்றதுபோல் புத்திர ரத்தினமாகப்பெற்று, பிராமணருக்குரிய நன்னடைகளிற் சிறிதும் வழாது பாதுகாத்து உற்றவயதில் உபநயன முதலிய சடங்குகளை உலோபமறச் செய்து உயிரே யென்னப் போற்றி வந்தனர்.

இச்சமையத்தில் சடையனார் தம்மரும் பெறன் மைந்தருக்குத் திருமணமுடிக்கக் கருதி தம் மரபினராகிய புத்தூர் சடங்கவி சிவாசாரிய ரென்னும் புண்ணியரின் புதல்வியைப் பேசுமாறு சில பெரியோரைப் பொருத்தினர். அம்முதியோர் சடங்கவியாரிடம் போய்த் தங்கருத்தை வெளியிட அவரிதற்கு முன்னமேயே நாவலூரரைப்பற்றி நன்றாயறிந்தவராகையால் அவர் நகைமுகங்கொண்டின்புற்று, முற்றுமுணர்ந்த முதியீர்! தங்கள் கருத்தின்படியே யாகுக, தங்கள் சித்தமே யென்பாக்கியமென உவப்புடன் ஒப்புக்கொண்டார்.

தாம் நாடிச்சென்ற காரியம் நலிதலிலாது கைகூடிய நற்செய்தியை சடங்கவியாரிடம் போயிருந்த புண்ணியர் மிக்க களிப்புடன் சடையனாருக்குரைக்க அவரும் மிக்க சந்தோஷ சித்தராய் அதியருகி லிருக்கும் ஓர் சுபதினத்தைக் குறித்துக்கொண்டு, அத்திருமணத்திற்கு விஜயஞ்செய்ய தம் பந்து மித்திரர்கட்கு திருமணவோலை போக்கினர். இத்திருமணவோலையைக் கண்ட யாவரும் விஜயஞ்செய்ய ஆநூர் அதி ஆடம்பரத்துடன் திருமணக்கோலம் பூண்டு சுற்றத்தார் சூழ அஸ்வமீதாரோகணித்து, அலைகடல் ஒலியையும் அடக்கும் அரிய மங்கலவாத்திய கோஷத்துடன் புத்தூர் சடங்கவியார் வீட்டிற்குச் சென்று மணவறையிற்புகுந்து ஹோம முதலிய மங்களச் சடங்கிலிருக்கையில், அடியார்க் கெளியராகிய அரவாபரணனார் ஆதியில் தடுத்தாட்கொள்வோம் என்று

ஆரூரருக் கருளியதுபோல் தசையெலா மொடுங்க மூத்த கிழத்திருக் கோலங்கொண்ட பிராமணராய் நீக்கமற நிறைந்திருக்கும் அச்சபை நடுவிற் புகுந்து சுற்றங்கள் சூழவிருக்கும் சுந்தரரை நோக்கி, சுந்தரா! உனக்கும்நமக்குமிருக்கும் வழக்கினையொழித்தே நீ மணஞ் செய்து கொள்ளவேண்டும், இலதேல் அதனைத் தவிர்க்க வேண்டுமென்றார்.

சபைநடுவில் நடுநாயகமா யிருந்த ஆரூரர் அதிசயமுற்று ஐயரே! உமது வழக்கியாது?ஒன்று மொளியா துரைமின்?என்னலும், ஒப்புயர்வற்ற பரமசிவம் ஆங்கு கூடியிருந்தோ ரியாவரையும் நோக்கி, மணமகனாகிய இவ்வாரூரன் நம் அடிமை இதுவே நம்வழக்காமென்றார். இதைக் கேட்ட சபையாரிற் சிலர் நகைத்தார்; சிலர் சீற்றங் கொண்டார்; ஆரூரரும் வேதியர் வார்த்தையினால் வெருண்டு அவரை பரிஹசித்து புன்முறுவல் புரிய, சுவாமி சபையாரையும் ஆரூரரையும்நோக்கி, ஆரூரா! உனது பாட்டன் கைப்பட எழுதிக்கொடுத்த முறியோலை என்னிடத்திருக்க ஏதுமறியான்போல் நகைப்பதென்ன விந்தை! நமக்கு நீ அடிமையாகியே தீரவேண்டுமென்றருளினார்.

இவ்வாறு கூறிய ஐயர் திருமுகத்தை ஆரூரர் நோக்கி ஐயரே! உலகிலிதுவரையினும் நடவாவிஷயத்தை நால்வரும் நங்கநவில்கின்றீர்! உலகில் அந்தணர்,அந்தணருக் கடிமைப்படுவதில்லை, யென்பதை நீரறியீரா! நீர்பித்தரா! வென்ன, சுவாமி நான் பித்தனாலுமாகிறேன் அல்லது பேயனாலுமாகிறேன் அதைப்பற்றி யுனக்கென்ன? நீ நமக்கடிமைப் பட்டேயாகவேண்டுமென்ன, அதற்கு ஆரூரர், ஐயரே! உம்பால் எனது பாட்டனார் எழுதிக் கொடுத்த முறியோலை இருக்கிற தென்றீரே, ஏதோ அதைக்காட்டும் பார்ப்போமென்ன, ஐயர், ஆரூரா! அதைநீயோ பார்த்தறியத் தகுந்தவன். இச்சபையார் பார்த்து நிர்மானிக்க நீ நமக்கு அடிமையாவதே கடனென்றார். இச்சுடு சொல்லைக்கேட்டலும் சுந்தரற்கு இன்னுமதிக கோபமூண்டு சுவாமிபாலிருக்கும் ஆளோலையைப் பறிக்க அவர்மேல்விழ, அவர் பயந்தவர்போலோட, ஆரூரரும் அவரைவிடாது தொடர்ந்து கட்டிப்பிடித்து அவர்பாலிருந்த ஆளோலையைக் கைப்பற்றிக் கிழித் தெறிந்தனர். சுவாமியும் சுந்தரரைவிடாது கட்டிப்பிடித்துக்கொண்டு, சபையோரே! இவன் நம்பாலி

ருக்கும் முறியோலையை எவ்விதம் முறிக்கலாம். ஈக்கு நியாயமி லேயோ! நடுவிலேயோ! என்று பலவாறு முறையமிட்டார்.

இவ்வுபைய சக்ஷியாரின் சக்ஷியைக் கவனித்திருந்த சபை யோர், வீண்வாதஞ் செய்யும் வேதியரே! உமதில்ல மெங்ஙன மென்ன, அசற்கவர்யாமிருப்பது திருவெண்ணெய் நல்லூரே (சற்கா லம் பண்ணுருட்டி ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து திருக்கோவலூ ருக்குப் போகும் பாதையில் 15-வது மைலி லிருக்கிறது.) வேறெ ங்கு மில்லை. அதைப்பற்றி உக்களுக் கவ்சியமென்ன? இவ்வா ரூரன் நம்மிடமிருந்த முறியோலையை அக்கிரமமாகப் பிடுங்கிக்கி ழித்தெறிந்ததே இவன் நமக்கடிமை யென்பதைக் காட்டப் போ துமான ஆதாரவல்லவா வென்றார்.

இவ்வாறு சுவாமி பேசிக்கொண்டிருக்கையில் சுந்தரர் ஐய ரே! நீரிருப்பது திருவெண்ணெய் நல்லூரே யாயின் ஆங்கிருக்கு ம் பெரியோர்முன் உமதடாவழக்கைச் சொல்லவாருமென்ன ஐய ரும் ஓ! ஓ! நல்லகாரியம்! நல்லகாரியம்! ஆங்கிருக்கும் அந்தணர் முன்னே, ஆதியிலெழுதிக் கொடுத்த ஆவணத்தைக்காட்டி மெய்ப்பித்து உன்னை அடிமையாக்கிக் கொள்வோம்,நீ அங்கேயே வாவென்று சுவாமி தண்டேந்தித் தள்ளாடித் தள்ளாடி வெகு அவ சரமாக முன்செல்ல, உணர்ச்சியை யுண்டாக்கக் கூடிய ஒவ்வொரு வழக்கிலும் ஊரே ஒன்று சேர்ந்து முடிவை எதிர்பார்ப்ப தியல்பா கையால், ஆரூரருடன் யாவரும் உருண்டு திரண்டு திருவெண் ணெய் நல்லூரில் கூடியிருந்த வேதியர் சபையைச் சேர்ந்தனர்.

வாதிப்பிரதி வாதிகளாக, வயோதிபரும் வாலிபரும் பெருங் கூட்டத்துடன் வந்திருப்பதைப் பார்த்த சபையார், வாரீர்! வாரீர்! உங்களுக்கு நிகழ்ந்ததை உரையுங்கள் என்று சொல்லி வாய்மூடு முன்னரே, விருத்த வேதியர், சபையோரே! இதோநிற்கும் ஆரூ ரன் எனக்கடிமை, அதையான் நிரூபிக்கும் பொருட்டு இவன் பா ட்டன் எழுதிக்கொடுத்த முறியோலையை யான் இப்பெரியோர் கள் முன் எடுத்துக்காட்ட இவன் மேல்விழுந்து அதைப் பறித்துக் கிழித்தெறிந்துவிட்டு ஒன்று மறியான் போல் இதோ வந்து நிற்கி ருன், வேண்டுமெனில் இவர்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டு இவனை நமக்கடிமை செய்யச் செய்யவேண்டுமென்ருர். இதனைக் கேட்ட சபையோர் குலுங்க நகைத்து, அந்தணரே! இவ்வுலக

முண்டாயிதுவரையினும் வேதியர் வேதியருக் கடிமைப்பட்டதேயில்லை நீர் சொல்லுவது புதுமையினும் புதுமையாகவே இருக்கிறது. ஆயினுமென்ன ஒரு விஷயத்தை நிரூபிப்பதற்கு அனுபவம் லிகிதம், சாக்ஷியம் இம்மூன்றி லொன்றேனும் வேண்டுமாதலால், உம்பாலிருக்கும் ஆதாரமென்ன? அதைக் காண்பியுமென்ன அதற்கு சுவாமி சபையோரே! இவன் ஆங்கு கிழித்தெறிந்த ஓலை, மூல ஓலையைப் பார்த்தெழுதியபடி யோலை, என்பால் மூல வோலையே யிருக்கின்றது, அதையும் இவன் முன்போல் கிழிக்காவண்ணந் திட்டஞ்செய்வீரேல் அதை உங்களுக் கெடுத்துக்காட்ட யாதும் ஆக்ஷேபனையே யில்லை யென்னலும் அவர்களும் அவ்வாறே திட்டஞ்செய்ய, சபையார் உத்தாரப்படி ஒரு கணக்கனெழுந்து சுவாமியை மும்முறை வணங்கி அவர்பாலிருந்த ஓலையைவாங்கி சபையாரியாவருங் கேட்டு சந்தேக நீங்க அடியில்வருமாறு வாசிக்கலுற்றான்.

## மூல முறியோலை.

அருமறை நாவலாதி சைவனு ரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர் பித்தனுக் கியானு மென்பால்
வருமுறை மரபுளோரும் வழித்தொண்டு செய்தற்கோலை
இருமையா லெழுதி நேர்ந்தே னிதற்கிவை யென்னெழுத்தே

திருநாவலூரி லிருக்கும் ஆதி சைவப்பிராமணனாகிய ஆரூரன் என்னும் யான் நாளது முதல் யானும், என்வழியாரும் திருவெண்ணெய் நல்லூரிலிருக்கும் பித்தனுக்கு அடிமை செய்யத் திரிகரண சுத்தியாய், முறியோலை எழுதிக்கொடுத்து அதில் என் கையெழுத்து மிட்டிருக்கின்றேன்.

இப்படிக்கு.
ஆரூரன்.

என வாசிக்கவும், அம்முறியோலையில் சாக்ஷி கையெழுத்திட்டிருப்பது தங்களுடையதே யென ஆங்கிருப்போர் ஒப்புக்கொள்ளவும், சபையோர், ஆரூரரே! இஃதுமது பாட்டனார் கையெழுத்தோ பார்த்துச் சொல்லுமென, இதற்குள் பரமபதி யவர்களைப் பார்த்து சபையோரே! இச்சிறியனோ தன்பாட்டன் கையெழுத்தைப் பகுத்தறிய வல்லன். இவன் பாட்டன் எழுதியவேறு கைச்

சாத்து இருக்குமோலையைத், தருவித்து இதையும், அதையும் ஒத்திட்டு ஒன்றாயிருக்குமேல் யோசித்து நியாயஞ் சொல்லவேண்டுமென்றார் சபையோர் அவ்வாறே யழைத்துப்பார்த்து சிறிதும் பேதமற்றிருப்பது கண்டு ஒன்றுங் [illegible]ராய், ஓ ஆரூரரே! உம்முடைய எதிர்வாதத்தைச் சொல்லுமென்றார்கள். ஆரூரர் அறநெறிமுற்று மறிந்த அந்தணரே! என்னை ஆதிசைவ னென்றறிவீர்கள். இது மனத்தினாலறிய வொண்ணா மாயையாயா யிருக்கின்றது. இதைப்பற்றி தங்களுக்கியாதுரைக்க வல்லேனென்று சொல்லி நின்றனர். அறநெறி முற்று முணர்ந்த அந்தணர் (1-வது) ஆரூரர் ஐயரிடத்திருந்த ஆவணத்தை வலியக்கிழித்தெறிந்ததினாலும் (2-வது) முறியோலையில் ஆரூரர் பாட்டனார் கையெழுத்தேயிருக்கின்றதாலும், (3-வது) அதில் காட்டப்பட்டிருக்கும் சாக்ஷிகளும் இதிலிருப்பது தங்கள் கையெழுத்தே யென்று ஒப்புக்கொள்வதாலும், அவர்களும் இவ்வூர் பெரியோர்களாயிருத்தலாலும், பிரதிவாதியாகிய ஆரூர் எடுத்துக் காட்டுவது அவ்வளவு சிறப்புடைய நியாயமல்ல வாதலாலும், இவ்வாரூரர் ஐயருக்கு அவசியம் அடிமைப்பட்டே ஆகவேண்டியதெனத் தீர்மானிக்கின்றோம் என்ன, ஆரூரர் சபையோரே! விதிமுறை யிஃதேயாயின் யான் கூடாதென்ப தியலுமோவென் றெழுது சித்திரம்போல் நின்றனர்.

மீண்டும் சபையோர் வேதியரை நோக்கிப் பெரியீர்! நீர் காட்டியமுறியோலையிலிருக்கும் ஊரே எங்களூராயிருப்பதனால் உமக்கிங்கிருக்கும் வீடுவாசல்களைக் காட்டவேண்டுமென்ன, அவர் ஆரூரருடன் சபையாரை யழைத்துக்கொண்டு அவ்வூரிலிருக்குந் திருவருட்டுறை யென்னுஞ் சிவஸ்தலத்திற் புக்கு மறைய, பின்றொடர்ந்தார் அவரைக் காணாது மயங்கி நின்றனர்.

அடிமைப்பட்ட ஆரூரரோ, தளராது தனியாய் தாம்மாத்திரம் என்னை யாட்கொண்ட அந்தணர் கோயிலினுட் புகுந்து மறைந்த காரணமியாதென அதி அத்யந்த ஆசையுடனும், வியப்புடனும் ஐயரைத் தேடுங்கால் அவர் திருவருட் சத்தியாரோடு அறவடிவாகிய ரிஷபத்தின் மீது ஆரோகணித்து அவருக்குக் காக்ஷிதந்தருளி முற்காலத்தை யுணர்த்தித் தாம் வலிய வந்து தடுத்தாட்கொண்டதை சவிஸ்தாரமாகத் திருவாய்மலர்ந்தருளினர். இதைக்கேட்

டலும் ஆரூரர் தம்மையறியாத சந்தோஷத்தினால் சுவாமியின் பாதபங்கயங்களில் அடியற்ற பனையென வீழ்ந்திறைஞ்சி ஆனந்த மாய்க்கசிந்துருகி, அண்ணலே! இவ்வடியேனை யொருபொருளாயுன்னி வலியத் தடுத்தாட் கொண்ட அருட்டிறத்தினை என்னென்று சொல்வேனென மீண்டும் பணிய, சுவாமி சுந்தரா! நீ நம்முடன் வன்சொற் சொல்லி வழக்காடியதால் வன்றொண்டன் என்னு நாமமுடையனாய் நம்மைத் தமிழினாற் பாடக்கடவா யென்றார். அதற்கு ஆரூரர் அஞ்சலியஸ்தராய் இருகரங்களையுங் குவித்துநின்று எப்பொருட்கு மிறைவனே! இடர்க்கடல் கடத்தும் எம்பிரானே! அடியேன் தேவரீருடைய அனந்த கலியாண குணானுபவங்களி லெதையறிவேன்! என்னென்று பாடுவேன்! என்று நிற்க பகவான் சுந்தரா! நீ நம்மை மணப்பந்தரில் பித்தா வென்றேசினமையால் நம்மைப் பித்தனென்றே பாடுக வென்றருளலும், உடனே சுந்தரர், பித்தா வென்பதையே முதலாகவைத்து.

திழுவெண்ணெய் நல்லூர் தேவாரம். பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா
வெத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை [றையு
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டு
ளத்தாவுனக் காளாயினி யல்லே னெனலாமே.

காரூர் புனலெய்திக் கரைகல்லித் திரைக்கையாற்
பாரூர்புக ழெய்தித்திகழ் பன்மாமணியுந்திச்
சீரூர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையு
ளாரூரனெம் பெருமாற்கா ளல்லே னெனலாமே.

திருச்சிற்றம்பலம்.

என்று கசிந்துருகிப் பாடிய தேவாரத்திருப்பதிகத்தை சுவாமி கேட்டானந்தித்து சுக்தரா! இவ்வாறே நந் தலங்கடோறுஞ் சென்று நம்மைப்பாடக் கடவா யென்றனுகிரகித்து மறைந்தருளினார். சுந்தரரும் அக்கட்டளையைத் தலைமேற்றாங்கி திருநாவலூர்க்கெழுந்தருளினார். இஃதிங்ஙனமாக,

அயலோர்தவ முயல்வார் பிறரன்றே மணமழியுஞ்
செயலாளிகழ் புத்தூர் வரு சிவவேதியன் மகளும்
உயர்காவலர் தனிநாதனை யொழியாதுணர் வழியிற்
பெயராதுயர் சிவலோகமு மெளிதாம் வகைபெற்றாள்.

என்றவாறு புத்தூர் சடங்கவியார் புதல்வியார் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய பாத பங்கயங்களைச் சதாநினைத்து நினைத்து சிலநாளில் சிவபதமெய்தினர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருவருட்டுறை சிவாலயத்தில் எழுந்தருளிய பெருமான் தம்மை யாட்கொண்டபின் திருநாவலூருக்கெழுந்தருளி,

**திருவெண்ணெய் நல்லூர், திருநாவலூர்தேவாரம் பண்-நட்டராகம்**

**திருச்சிற்றம்பலம்.**

கோவல நான் முகன் வானவர் கோனுக்குற் றேவல்செய்ய
மேவலர் முப்புரந் தீயெழு வித்தவ னோரம்பினா
லேவலனார் வெண்ணெய்நல்லூரில்வைத்தென்னையாளுங்கொண்ட
நாவலனார்க் கிடமாவது நந்திரு நாவலூரே.

நாதனுக்கூர் நமக்கூர் நரசிங்க முனையரைய
னாதரித் தீசனுக் காட் செயுமூரணி நாவலூரென்
றோதநற் றக்கவன் றொண்டனாரூர னுரைத்ததமிழ்
காதலித்துங் கற்றுங் கேட்பவர் தம்வினை கட்டறுமே.

**திருச்சிற்றம்பலம்.**

என்னுந் திருப்பதிக மோதி, திருத்துறையூருக் கெழுந்தருளி,

**திருத்துறையூர்த் தேவாரம் பண் - தக்கராகம்.**

திருச்சிற்றம்பலம்.

மலையாரருவித் திரண்டமாமணி யுந்திக்
குலையாரக் கொணர்ந் தெற்றியோர் பெண்ணை வடபாற்
கலையா ரல்குற் கன்னிய ராடுந்துறையூர்த்
தலைவாவுனை வேண்டிக் கொள்வேன் றவநெறியே.

செய்யார் கமலம் மலர் நாவலர் மன்னன்
கையாற் றொழு தேத்தப் படுந் துறையூர்மேற்
பொய்யாத்தமிழூர னுரைத்தன வல்லார்
மெய்யே பெறுவார்க டவநெறிதானே.

திருச்சிற்றம்பலம்.

எனத்திருப்பதிகமோதி, சிதம்பரத்தி லெழுந்தருளியிருக்கும் நடேசரைத்தரிசிக்கப் போவாக்கொண்டுபுறப்பட்டு, தற்காலம்பண்ணுருட்டி ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தென்கிழக்காய் ஒருநாழிகை தூரத்தில் கெடிலநதியின் வடகரையிலிருப்பதும், அட்டவீரட்டத்திலொன்றானதும், காடவன் என்னுஞ் சமணவரசன் சைவசமயமே சமயமெனத் தெளிந்தபின் பாடலி புரத்திலிருந்த சமணர் பள்ளிகளையும், பாழிகளையுமிடித்து அவைகளின் கல்முதலியவைகளாற் கட்டிய குணதரவீச்சுரம், என்னுந் தலத்தையுடையதுமாகிய திருவதிகைத் திருத்தலத்தைச் சமீபிக்கையில், திருநாவுக்கரசு சுவாமிகள் உழவாரத்தால் கைத்தொண்டு செய்தருளிய இத்திருத்தலத்தையோ நாயினேன் மிதிக்கப் பாத்திரனென்று நடுநடுங்கி அவ்வெல்லையுட்செல்லாது அருகிலிருந்த சித்தவட மடத்திலெழுந்தருளி அன்றிரவு வீரட்டானேசுரர் திருவடிகளே தெப்பமெனத் தியானித்து நித்திரை புரியுங்கால், வீரட்டானேசுரர் விருத்தப்பிராமணத் திருக்கோலங் கொண்டாங் கெழுந்தருளி தாமும் நித்திரை செய்வார்போல் நடித்து காணற்கரிய தமது திருவடிகளைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிரசிற்சூட்ட அவர் திடுக்கெனவிழித்து ஐயரே! என் உமதுபாதத்தை என்தலைமேல் நீட்டினீரென சுவாமி, ஐயா! என்முதுமையினால் மயங்கியப்படிச் செய்தேன் கோபியாதேயும் என்றருள அவரும் ஒத்துக்கொண்டு வேறொருதிசை தஞ்சிரசை வைத்துக்கொண்டு சயனிக்க சுவாமியு முன்போல் திருவடிநீட்டிச் சமாதானஞ்சொல்ல சுந்தரற்குக் கோபமுண்டாய்.

யிங்கென்னைப்பலகாலு மிதித்தநீயார்?" என்னலும்,

கங்கைசடைக் காந்தபிரா னறிந்திலையோ வென்றருளித் திருவுருக்கரந்தனர். சுவாமி மறைந்தருளலும், சுந்தரர் அந்தோ! சுருதிமுடியிலொளிருஞ் சுவாமியென்றறியாது என்செய்தேன்! பாவியேன் இனியென்செய்வே னென்றேங்கித் தமதிதைய கமலத்தில், தித்திக்கத்தித்திக்க, வீரட்டானேசுரரைத்தியானித்து.

திருவதிகை வீரட்டானம். பண்-கொல்லிக் கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

தம்மானை யறியாத சாதியாருளரே - சடைமேற்கொள் பிறை
யானை விடைமேற்கொள் விகிர்தன்-கைம்மாவி னுரியானைக்
கரிகாட்டிலாட-லுடையானை விடையானைக் கறைகொண்ட

கண்டத் - தெம்மான்ற னடிக்கொண்டென் முடிமேல்வைத் திடுமென்னு - மாசையால் வாழ்கின்ற வறிவிலாநாயே-னெம் மானை யெறிகெடில வடவீரட்டானத் - துறைவானை யிறை போது மிகழ்வன்போல் யானே.

என்பினையே கலனாக வணிந்தானை யெங்க-ளெருதேறும் பெரு மானை யிசைஞானி சிறுவன் - வன்பனைய வளர்பொழில்சூழ் வயனாவ லூர்க்கோன் - வன்றொண்ட னாரூரன் மதியாது சொன்ன - வன்பனையாவர்க்குமறி வரியவத்தப் - பெருமானை யதிகை மாநகருள்வாழ் பவனை - யென்பொன்னை யெறிகெ டில வடவீரட்டானத் துறைவானை யிறைபோது மிகழ்வன் போ லியானே.

திருச்சிற்றம்பலம்.

எனத்துதித்து, ஆங்கிருந்து புறப்பட்டுத் திருத்தினை நகரை யடைந்து தேகபரவசராய்.

திருத்தினைநகர்த் தேவாரம்—பண்—தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

நீறுதாங்கிய திருநுதலானை நெற்றிக்கண்ணனை நிரைவளைமடந் தை-கூறுதாங்கிய கொள்கையினானைக் குற்றமில்லியைக் கற் றையஞ்சடைமே-லாறுதாங்கிய வழகனையமரர்க் கரியசோதி யை வரிவராலுகளுஞ் - சேறுதாங்கிய திருத்தினைநகருட் சிவ க்கொழுந்தினைச்சென்றடை மனனே.

நீடுபோக்கையிற் பிறவியைப்பழித்து நீங்கலாமென்று மனத்தினை த்தெருட்டிச் சேடுலாம்பொழிற் றிருத்தினைநகருட் சிவக் கொழுந்தினைத் திருவடியிணைத்தா ளுடெலாம்புகழ் நாவலூ ராளி நம்பிவன்றொண்ட னாரனுரைத்த பாடலாந்தமிழ் பத்தி வைவல்லார் முத்தியாவது பரகதிப்பயனே.

திருச்சிற்றம்பலம்.

என்று பாடித்துதித்து, ஆங்கிருந்து புறப்பட்டுச் சிதம்பரத்தை யடைந்து சிதம்பரநாதரைக்கண் டானந்தக் கடலிலாழ்ந்து தம்மையறியாது.

கோயிற்றேவாரம் - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மடித்தாடு மடிமைக்க ணன்றியே மனனேநீ வாழுநாளுந் தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட்கொள்வான்-கடுத்தாடுங் கரதலத்திற் றமருகமு மெரியகலுங் கரியபாம்பும்-பிடித்தாடிப் புலியூர்ச் சிற்றம்பலத்தெம் பெருமானைப் பெற்றாமன்றே.

பாரூரு மரவல்கு லுமைநங்கை யவள்பங்கன் பைங்கணேற்ற - னாரூரன் றருமனார் தமர்செக்கிலிடும்போது தடுத்தாட்கொள்வா - னாரூரன்றம்பிரா னாரூரன் மீகொங்கி லணிகாஞ்சி வாய்ப் - பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே பெற்றாமன்றே.

திருச்சிற்றம்பலம்.

என்றுபாடியருளி ஆனந்தக்கண்ணீ ராறாய் வடிய அசைவற்று நின்றனர். அச்சமையம் அம்பலவாணர் திருவருளினால் சுந்தரா திருவாரூர்க்குவா வென் றெழுந்த அசரீரியைக் கேட்டானந்தித்த சுந்தரர் கனகசபையை வணங்கிப் புறப்பட்டு, தற்காலம் சிதம்பரத்திற்குத் தெற்கே 11-வது மைலில் ரெயில்வே ஸ்டேஷனாயிருப்பதும் திருஞான சம்மந்த சுவாமிகள் திருவவதரித்ததுமாகிய சீர்காழியை நெருங்கி அத்திருப்பதியை மிதிக்க வஞ்சி அதின் எல்லையை வணங்கி வலம் வருகையில பக்தி வலையிற்படும் பரம சிவம் அவருக்குக் காக்ஷிதந்தருள அவர் அழலுக்குள் வெண்ணெயென உருகி,

திருக்கழுமலத்தேவாரம்-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

சாதலும் பிறத்தலுந் தவிர்த்தெனைவகுத்துத் தன்னருட்ந்த வெந்தலைவனை மலையின்-மாதினை மதித்தங் கோர்பால் கொண்ட மணியை வருபுனல் சடையிடை வைத்தவெம்மானை - யேதிலேன் மனத்துக் கோரிரும்புண்ட நீரை யெண்வகை யொருவனையெங்கள் பிரானைக் - காதில்வெண் குழையனைக் கடல்கொள மிதந்தகழுமல வளநகர்க் கண்டுகொண்டேனே.

செழுமலர் கொன்றையுங் கூவிளமலரும் விரவிய சடைமுடியடி
களை நினைந்திட்-டழுமலர்க் கண்ணிணையடியவர்க்கல்லாலறி
வறி தவன்றிரு வடியிணை யிரண்டுங்கழுமல வளநகர்க் கண்டு
கொண்டேரன் சடையன்றன் காதலன் பாடிய பத்துந்-தொ
ழுமல ரெடுத்தகை யடியவர்தம்மைத் துன்பமு மிடும்பையுஞ்
சூழகிலாவே.

திருச்சிற்றம்பலம்.

என்று திருப்பதிக மோதியருளி, ஆங்கிருந்து தற்காலம் சீர்காழி ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தெற்கில் அரைமைல் தூரத்திலும், சீர்காழி திருக்கோயிலிக்குத் மேற்கில் கால்மைல் தூரத்திலுள்ளதுமான திருக்கோலக்கா முதலிய சிவஸ்தலங்களைவணங்கிக் கொண்டு, பதினொரு திருமுறைகளை செப்பேடுசெய்து தியாகர் சந்நிதியி லேற்றுவித்த அபயகுல சோழனும், ஸ்ரீ-சேக்கிழார் அருளிய பெரியபுராணத்தைப் பன்னிரண்டாந் திருமுறையாக்கிச் செப்பேடுசெய்துதியாகர் சந்நிதியிலேற்றுவித்த அநபாய சோழனும் அரசுபுரிந்த அரும்பதியாயும், சப்தவிடங்கத் தலங்களுள் தலைமையாயுந் தற்காலம் நாகப்பட்டினத்திற்கு மேற்கில் 14-வது மையில் ரெயில்வே ஸ்டேஷனுயு மிருப்பதுமாகிய திருவாரூருக் கெழுந்தருளி திருக்கோயிலுட்சென்று வன்மீகநாதரை மனமகிழ, மகிழ வணங்கிப் பேரின்பவாருதியிலாடி மனவாக்கிற்கெட்டாச் சந்தோஷித்தாராய்.

திருவாரூர் தேவாரம்-பண்-காந்தாரம்.

**திருச்சிற்றம்பலம்.**

கரையுங்கடலு மலையுங்காலையு மாலையு மெல்லா
முரையில் விரவிவருவா ரொருவனு ருத்திரலோகன்
வரையின் மடமகள் கேள்வன்வானவர் தானவர்க்கெல்லா
மரையனிருப்பது மாரூரவரெம்மையு மாள்வரோகேளீர்.

எந்தையிருப்பது மாரூரவ ரெம்மையு மாள்வாரோ வென்று
சிந்தைசெயுந்திறம் வல்லான் றிருமருவுந் திரடோளன்
மந்தமுழவமியம்பும் வளவய லுவலாரூரன்
சந்தமிசையொடும் வல்லார்தாம்புக ழெய்துவர்தாமே

**திருச்சிற்றம்பலம்.**

என்றுதிருப்பதிகம் பாடிய காலத்து சுந்தரா! நாமுனக்குத் தோழரானோம், நீ முன்னிருந்த திருமணக் கோலத்துடன் என்றும் விளையாடிக் கொண்டிருப்பாயாக, வென்றோர் திருவாக்கெழலும், சுந்தரரும் அக்கட்டளையைச் சிரமேற்றாங்கித் தம்பிரான் தோழர் என அடியார்களியாவரும் அருமையா யழைக்கத் திருமணக்கோலத்துடனே வன்மீகநாதரை ஓயாது வணங்கிக்கொண்டு அவ்விடமேயிருந்தருளினார். இவர்விஷயமிப்படியிருக்க,

முன் ஸ்ரீ-கைலாயத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இச்சை கொண்ட சேடியரி லொருவராகிய கமலினி என்பார் அத்திருவாரூர் திருப்பதியில் உருத்திரகணிகையர் குலத்திலுதித்துப் பரவையார் என்னும் திருநாமம்படைத்து மங்கைப்பருவமடைந்து தந்தோழியருடன் தினந்தவறாது வன்மீகரைவணங்கி வருநாள், ஓர் தினம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரவையாரைக்கண்டு அவரைப் பாணிக்கிரகணஞ் செய்துகொள்ள வேண்டுமெனச் சந்நிதானத்தில் விண்ணப்பித்துக் கொண்டார். சுவாமியும் அவ்விண்[illegible]திற்குச் செவிசாய்த்தருளிப் பரவையாரைச் சுந்த[illegible] கட்குத் திருமணமுடிக்குமாறு அடியார்கட் [illegible]ளினர், அதையவர்கள் சிரசாகவகித்து விதிப்படி விவாகத்தை நிறைவேற்றினர்.

18146

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரவைய[illegible]டன் சுகித்திருக்கையில் ஓர்நாள் சிவதரிசனத்திற் கெழுந்தருளி[illegible] ஆங்கு தேவாசிரியமண்டபத்தில் சேர்ந்திருந்த சிவனடியார்களைக்[illegible] நான் இவ்வடியார்கட்கு அடியனாகுநாள் எந்நாளோவென ஆ[illegible]ன் கருதி ஆலயத்துட்செல்ல, அதனையறிந்த பெருமான் அவருக்குக் கா[illegible]தருளி நீ நம்மடியர்மேற்பதிகம் பாடுவாயென்றாக்ஞாபிக்க, ஆ[illegible] அவரைவணங்கி அடியரின் அருமை பெருமையறியா நாயேன் என்னெனப் பாடுவேன், அச்சக்தியை அடியேனுக்கருள வேண்டுமென்றிறைஞ்ச, சுவாமியுந் திருவுளமகிழ்ந்து தில்லைவாழந்தணர்த மடியார்க்கு மடியேன் என்றடியெடுத்தருளி மறைந்தருளினார். அதுகொண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாசிரிய மண்டபத்தை யடைந்து ஆங்கெழுந்தருளிய அடியவரியாவருக்குந் தனித்தனியாய் அடியேன் யெனத் திருத்தொண்டத் தொகை யெனுந் திருப்பதிகமோதி அகமகிழ்ந்திருந்தனர்.

பின் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிலநாள் ஆங்குசிவத்தொண்டு செய்திருந்து அதற்கு சமீபத்திலிருக்கும் குண்டையூரில் வசிக்கும் வேளாள குலோத்தமராகிய குண்டையூர் கிழார் கொடுத்த நெற்குவியலைப்பெற்று அதைப் பரவையார் திருமாளிகையிற் சேர்ப்பிக்கும்பொருட்டு, தற்காலம் திருக்குவளையென வழங்குவதும் சப்த விடங்க ஸ்தலங்களு ளொன்றான தும் கீழ்வேளூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு தெற்கு 7-மைல் தூரத்திலும், திருவாரூருக்குத் தென்கிழக்கில் 12-மைல் தூரத்திலு மிருப்பதுமாகிய திருக்கோளிலி என்னும் திருப்பதியிலிருக்கும் சிவஸ்தலத்தையடைந்து.

திருக்கோளிலி-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

நீளநினைந்தடியேனுமை நித்தலுங்கைதொழுவேன்
வாளனகண்மடவா ளவள்வாடி வருந்தாமே
கோளிலியெம்பெருமான் குண்டையூர்ச்சிலநெல்லுப்பெற்றே
னாளிலையெம்பெருமானவை யட்டித்தரப்பணியே.

கொல்லைவளம்புறவிற் றிருக்கோளிலிமேயவனை
நல்லவர்தாம்பரவுந் திருநாவலூரனவ
னெல்லிடவாட்கள்வேண்டி நினைந்தேற்றியபத்தும்வல்லா
ரல்லல்களைந்துலகி லண்டர்வா னுலகாள்பவரே.

திருச்சிற்றம்பலம்.

என விண்ணப்பித்து கிருபை செய்தருள வேண்டுமென பிரார்த்திக்க, சிவபெருமான் திருவருள் சுரந்து, நெற்குவியலைக் கொடுபோய் பரவையார் மாளிகையிற் சேர்ப்பிக்க தமது சிவ கணங்களையேவ, சிவ கணங்களும் நெற்குவையைக் கொடுபோய் பரவையார் திருமாளிகையிலும், மற்ற விடங்களிலுங் குவித்தனர்.

பிறகு சுந்தர மூர்த்தி சுவாமிகள் மீண்டுந்திருவாரூரையடைந்து வன்மீகநாதரை வணங்கி பரவையார் திருமாளிகையை யடைந்து நடந்த விஷயங்களியாவையும் பரவையாருக்குக் கூறி அவருடன் சிலநாளங்கிருந்தனர் இவ்வாறிருக்கையில் கோட்புலி நாயனார் சுந்தர மூர்த்தி சுவாமிகளை திருநாட்டியத்தான் குடியிலிருக்குந் தமதில்லிற் கழைத்துக் கொண்டுபோய் சோடசோப சாரத்து

டன் திருவமுது செய்வித்து, உயர்ந்ததோ ராசனத் திருத்தி, சிங்கடி, வனப்பகை என்னுந் தமத் நமைப் புதல்விகளுடன் அவரை மெய்யன்புடன் வணங்கி, சுவாமி! அடியேன் பெற்ற இம்மக்களை யடிமைகளாய்க் கொண்டருள்க வென்னலும் சுந்தர மூர்த்தி சுவாமிகள் அப்பெண்களைப் புத்திரிகளாகப் பாவித்தருளி ஆங்கிருக்குஞ் சிவாலயத்துட் சென்று பேரின்பமேலீட்டால்,

திருநாட்டியத்தான் - பண் தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்

பூணுவதோரரவங்கண் டஞ்சேன் புறங்காட்டாடல் கண்டிகழேன் - பேணீராகிலும் பெருமையையுணர்வன் பிறவேனாகிலு மறவேன்-காணீராகிலுங் காண்பனென்மனத்தாற் கருதீராகிலுங்கருதி - நாணேலும்மடி பாடுத லொழியே னாட்டியத்தான் குடிநம்பி.

கூடாமன்னரைக் கூட்டத்துவென்ற கொடிறன்கோட்புலிசென்னி—நாடார்தொல்புகழ் நாட்டியத்தான்குடி நம்பியை நாளும் மறவாச்—சேடார்பூங்குழற் சிங்கடியப்பன் றிருவாரூரனுரைத்த-பாடலாகிலும் பாடுமின்றொண்டீர் பாடநும்பாவம் பாறுமே.

திருச்சிற்றம்பலம்.

என்றுபாடி யருளி இதன் திருக்கடைக்காப்பிற் றம்மை சிங்கடியப்பன் என்றும், கோட்புலி நாயனாரை சிறப்பித்து பாடியுஞ் சந்தோஷித்தருளினார். (திருநாட்டியத்தான் குடியென்னுமிக்ஷேத்திரம் தற்காலம் திருவாரூருக்கு தெற்கே 6-வது மைலில் ரெயில்வேஸ்டேஷனாக விருக்கிறது.) பிறகு சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவாரூருக்கு தென்கிழக்கில் 6 மைலிலிருக்கும் திருவலிவலக்ஷேத்திரத்திற் சிவதரிசனஞ் செய்து,

திருச்சிற்றம்பலம்.

திருவலிவலம் பண்-தக்கேசி.

ஊனங்கத்துயிர்ப்பா யுயிர்க்கெல்லா மோங்காரத்துருவாகி நின்றானை-வானங்கத்தவர்க்கும் மளப்பரிய வள்ளலை யடியார்கடம்முள்ளத்-தேனங்கத்தமுதாகி யுள்ளூறுந்தேனைத் தினைத்தற்கினியானை- மானங்கைத்தலத்தேந்த வல்லானை வலிவலந் தனில் வந்துகண்டேனே.

கலிவலங்கெடவாரழலோம்புங் கற்றநான்மறை முற்றனலோம-
வலிவலந்தனில் வந்துகண்டேனென மன்னு நாவலா ரூரன்வன்
றொண்ட-னொலிகொளின்னிசைச் செந்தமிழ்பத்து முள்ளத்
தாலுகந் தேத்தவல்லார்போய் - மெலிவில்-வானுலகத்தவ
ரேத்த விரும்பிவிண்ணுல-கெய்துவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

என்னுந் திருப்பதிகமோதி திருவாரூருக் கெழுந்தருளி வன்மீகநாதரை வணங்கி பரவையாருட னிருக்குநாளில் பங்குனி யுத்தரத்திருவிழா சமீபிக்க, பரவையாருக்கு திருவிழாச் செல விற் கில்லாமையால் தற்காலம் நன்னிலம் ரெயில்வே ஸ்டேஷ னுக்கு கிழக்கில் 4-வது மைலிலிருப்பதாகிய திருப்புகலூர் சிவசந் நிதியை யடைந்து எம்பெருமானே! பங்குனி யுத்திரத் திருவி ழாச் செலவுக்கு பரவையாருக்கு வேண்டும் பொரு ளளிக்க வேண் டும் வித்தகனே! யென விண்ணப்பித்து, தமக்கு நித்திரை வந் தெய்தியதால் ஆங்கு திருப்பணிக்கு வைத்திருந்த செங்கற்களை தலையணையாக வைத்துக்கொண்டு சயனித்து பிறகு கண்விழித்து நோக்க,

“வெற்றிவிடையா ரருளாலே வேமண்கல்லே விரிசுடர்ச்செம்
பொற்றிண் கனகமாக்கண்டு புகலூரிறைவ ரருள்போற்றி.”

திருப்புகலூர் - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

தம்மையேபுகழ்ந் திச்சைபேசிலுஞ் சார்விலுந் தொண்டர் தருகி
லாப்-பொய்ம்மையாளரைப் பாடாதேயெந்தை புகலூர்பாடு
மின்புலவீர்கா - ளிம்மையேதருஞ் சோறுங்கூறையு மேத்த
லாமிடர் கெடலுமா - மம்மையேசிவ லோகமாள்வதற் கியா
துமையுற வில்லையே.

சேறுவினிற்செழுங் கமலமோங்குதென் புகலூர்மேவிய செல்
வனை - நறவம்பூம்பொழில் - நாவலூரன் வனப்பகையப்பன்
சடையன்றன் - சிறுவன்வன்றொண்டனூரன்பாடிய பாடல்
பத்திவை வல்ல - ரறவனாரடிச் சென்று சேர்வதற் கியாது
மையுற வில்லையே.

திருச்சிற்றம்பலம்.

என்று பாடியருளி ஆங்கிருந்த செம்பொற் செங்கற்களை எடுப்பித்துக் கொண்டுதிருவாரூருக்கு வடக்கில் 8 மைல் தூரத்திலிருக்கும் திருப்பனையூரை யடைகையில் ஆங்கு சிவபெருமான் அவருக்கு திருநடனக்காக்ஷி தந்தருள, அதனைக் கண்டு உள்ளம்பூரித்தவராய்.

திருப்பனையூர் பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

மாடமாளிகை கோபுரத்தொடு மண்டபம்வளரும் வளர்பொழிற்-
பாடல்வண்டறையும் பழனத்திருப்பனையூர்-தோடுபெய்தொ
ருகாதினிற்குழை தூங்கத்தொண்டர்க டுள்ளிப் - பாடநின்
றூடுமாறு வல்லராயவரே யழகியரே.

வஞ்சிநுண்ணிடை மங்கைபங்கினர் மாதவர்வளரும் வள்பொ
ழிற்- பஞ்சின் மெல்லடியார் பயிலுந் திருப்பனையூர்-வஞ்சியும்
வள் நாவலூரன் வனப்பகையப்பன் வன்றொண்டன்-செஞ்
சொற்கேட்டுகேப்பாரவரே யழகியரே.

திருச்சிற்றம்பலம்.

என்று பாடி யருளி பரவைப் பிராட்டியாரை யடைந்து செம்பொற் செங்கற்களை யளித்து மிக்க சந்தோஷமாய் சிலநாளங்கிருந்தருளினர்.

பிறகு சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநன்னில முதலிய பல சிவஸ்தலங்களையும் ஆனந்தமேலீட்டால் நாத்தழும்பேறப் பாடிப் பாடிவணங்கி, தற்காலம் கூடலூருக்கு 35-வது மைலிலிருப்பதும்,

" தூசினலம்மை வீசித் தொடையின்மேற் கிடத்தித்துஞ்சு
மாசிலா வுயிர்கட் கெல்லா மஞ்செழுத்தியல்பு கூறி
யீசனே தனது கோல மீந்திடு மியல்பா லந்தக்
காசியின் விழுமி தான முதுகுன்ற வரையுங் கண்டான்."

என ஸ்ரீ - கந்தபுராணம் கோஷிப்பதுமாகிய விருத்தாசலமென்னும் திருமுதுகுன்ற திவ்விய க்ஷேத்திரமடைந்து பிறவிப்பயனிதுவே யெனப் பெருமானை தரிசித்து,

திருமுதுகுன்றம் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்செய்த மேனியினீர்புலித்தோலை யரைக்கசைத்தீர்
முன்செய்த மூவெயிலு மெரித்தீர் முதுகுன்றமர்ந்தீர்
மின்செய்த நுண்ணிடையாள் பரவையிவ டன்முகப்பே
யென்செய்த வாறடிகே-ளடியேன் இட் டளங்கெடவே.

பிறையாருஞ் சடையெம் பெருமானரு ளாயென்று
முறையால்வந் தமரர்வணங்கும் முதுகுன்றர் தம்மை
மறையார்தங் குரிசில்வயல் நாவலாரூரன் சொன்ன
விறையார் பாடவல்லார்க் கெளிதாஞ் சிவலோகமதே.

திருச்சிற்றம்பலம்.

என்ற திருப்பதிகமோதி யருள சுவாமியு மிக்க மகிழ்ந்தருளி சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு பன்னீராயிரம் பொன் கொடுத்தருள அதனைப் பெற்ற சுந்தர மூர்த்தி சுவாமிகள் எல்லாம் வல்ல எம்பிரானே ! திருவாரூருள்ளா ரனைவரும் பேராச்சரியமடைந்து தேவ ரீருடைய திருவிளையாட்டை யுணர்ந்துய்யுமாறு இப்பொன்னை ஆங்கு வரச் செய்தருளவேண்டுமென்று துதிக்க, அக்கால் "சுந்தரனே ! இப்பொன்னை மணி முத்தாற்றிலிட்டு நீ எண்ணியபடியே திருவாரூர் திருக்குளத்தில் எடுத்துக்கொள்" என்று சுவாமியின் திருவருளால் ஓர் அசரீரி வாக்கெழலும், இத்திருவாக்கைக் கேட்டருளிய சுந்தர மூர்த்தி சுவாமிகள் மிக்க மகிழ்வெய்தி அப்பொன்னில் மச்சமெடுத்துக்கொண்டு பொன் னவ்வளவையும் மணிமுத்தாற்றிலிட்டு அன்றேனைவலிந்தாட்கோண்டவருளிதிலறிவேனென்று இருதோளும் பூரித்து பல சிவஸ்தலங்களையும் பதிகம் பாடிப் பணிந்து கொண்டே திருவாரூரையடைந்து பரவையாருடன் இனிது வீற்றிருந்தார்.

இங்ஙனஞ் சிலநாளிருக்கையில் ஒருநாள் பரவையாரை நோக்கி பரவையே ! எனக்கு திருமுதுகுன்றர் கொடுத்தருளிய பன்னீராயிரம் பொன்னையும் மணிமுத்தா நதியிலிட்டு வந்தேன் அதை இப்போது இத்தலத்தின் திருக்குளத்தில் அவரருளா லெடுத்துத் தருகிறேன் என்னுடன் வாவென்ன, பரவையார் இஃதென்ன விந்தையென்றெண்ணிக் கொண்டு தாம் கூடவர, சுந்தரர் பர

வையாரை திருக்குளத்தின் கரையில் நிறுத்தி, தாம் வன்மீகநாத ரைவணங்கி குளத்திலிறங்கித் தேடிப் பார்க்குங்கால் ஒன்று மகப்ப டாது உளம்வருந்தி,

திருவாரூர் பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பாறுதாங்கிய காடரோ படுதலையரோ மலைப்பாவையோர்
கூறுதாங்கிய குழகரோ குழைக்காதரோ குறுங்கோட்டிள
வேறுதாங்கிய கொடியரோசுடு பொடியரோ விலங்கும்பிறை
யாறுதாங்கிய சடையரோ நமக்கடிகளாகிய வடிகளே.

படிசெய்நீர்மையிற் பத்தர்கள்பணிந் தேத்தினேன் பணியீரருள்
வடிவிலான்றிரு நாவலூரன் வனப்பகையப்பன் வன்றொண்டன்
செடியனாகிலுந் தீயனாகிலுந் தம்மையே மனஞ்சிந்திக்கு
மடியனூரனை யாள்வரோநமக் கடிகளாகிய வடிகளே.

திருச்சிற்றம்பலம்.

என்று பாடியருளியபோதே சிவபெருமான் திருவருளினால் வந்து குவிந்த பொற்குவியலை வாரியெடுத்து ஆட்கள் வசம்பரவையா ரில்லத்திற் கனுப்பிவிட்டு, தாம் வன்மீகநாதரை வணங்கி பரவை யாருடன் சிலகாலம் இனிது வீற்றிருந்தனர்.

இவ்வாறிருக்கையில் மீண்டுஞ் சிவஸ்தல யாத்திரையி லிச்சை வைத்து சப்தவிடங்கஸ்தலங்களு ளொன்றாகியதும், காரைக்கா லுக்குமேற்கே 3 மைல் தூரத்தில் ரெயில்வே ஸ்டேஷனா யிருப் பதும்,

வளங்கெழுவு தீபமொடு தூபமலர் தூவி
நளன்கெழுவி நாளும்வழி பாடுசெய்நள்ளாறே.

என்னுந் தேவாரம் பெற்றதுமாகிய திருநள்ளாறு முதலியபலதிவ்ய க்ஷேத்திரங்களையும் பாடி வணங்கிக்கொண்டு சீகாழிக்கு 4 மைல் தூரத்திலிருக்கும் திருக்கடாவூர் என்னும் திருக்குருகாவூர் சிவஸ்த லத்தை சமீபிக்கையில் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய பசிதா கத்தை யறிந்த சுவாமி பிராமண திருக்கோலங்கொண்டு ஓர் தண் ணீர் பந்தரியற்றி அங்கு அடியார்களோடு வந்திருந்த சுந்தரமூர்த்தி

சுவாமிகளை நோக்கி நீர் பசிதாகத்துடன் வந்திருப்பதால் என்னிடமிருக்கும் கட்டமுதை சாப்பிடுமென்ன, அவரும் தம்முடன் வந்த அடியார்களுடன் உண்டு உறங்கிவிழித்து நோக்க சுவாமி தண்ணீர்ப்பந்தருடன் மறைந்தருளியதைக் கண்டு, பேராச்சரியமும் பேரானந்தமுமடைந்து.

திருக்குருகாவூர் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

இத்தனையா மாற்ற மறிந்தில னெம்பெருமான்
பித்தரை யென்றும்மைப் பேசுவார் பிறரெல்லா
முத்தினை மணிதன்னை மாணிக்க முளைத்தெழுந்த
வித்தகனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

வளங்கனி பொழின் மல்கு வயலணிந் தழகாய்
விளங்கொளி குருகாவூர் வெள்ளடை யுறைவானை
யிளங்கிளை யாரூரன் வனப்பகை யவளப்ப
னுளங்குளிர் தமிழ்மாலை பத்தர்கட் குரையாமே.

திருச்சிற்றம்பலம்.

என்று பதிகம்பாடி யருளி சந்நிதியை வணங்கிக்கொண்டு, மீண்டும் பலஸ்தலங்களையுந் திருப்பதிகமோதி வணங்கிக்கொண்டே தற்காலம் செங்கற்பட்டு ரெயில்வே ஸ்டேஷனுக்கு தென்கிழக்கில் 9-வது மைலிலிருக்கும் திருக்கழுக்குன்றம் என்னுந்திவ்விய க்ஷேத்திரத்தை யடைந்து,

திருக்கழுக்குன்றம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

கொன்று செய்த கொடுமையாற் பலசொல்லவே
நின்றபாவம் வினைகடாம் பலநீங்கவே
சென்று சென்று தொழுமின்றேவர் பிரானிடங்
கன்றினொடு பிடிசூழ்தண் கழுக்குன்றமே.

பல்லில் வெள்ளைத்தலையன்றான் பயிலும்மிடங்
கல்லில் வெள்ளையருவித்தண் கழுக்குன்றினை
மல்லின் மல்குதிரடோ ளூரன்வனப்பினாற்
சொல்லச் சொல்லித் தொழுவாரைத் தொழுமின்களே.

திருச்சிற்றம்பலம்.

என்று பாடி வணங்கி தற்காலம் சிங்கபெருமாள் கோயில் ரெயில்வேஸ்டேஷனுக்கு வடமேற்கில் 1½ மைல் தூரத்திலிருக்கும் திருக்கச்சூர் ஆலக்கோயிலுக் கெழுந்தருளி சிவதரிசனஞ் செய்துக்கொண்டு கோயிலின் புறத்தில் பசியுடன் நிற்கையில், சுவாமி பிராமணவடிவங்கொண்டுவந்து சுந்தரரை நோக்கி ஐயா! நீர் மிக்க பசியுட னிருப்பதால் யானிங்கிருக்கும் பிராம்மணர் வீடுகளிற் போயாசித்து வருகிறேன். அதுவரையினும் நீரிங்கேயே யிருக்க வேண்டுமென்று கூறி அவ்வாறே யாசித்துவந்து சுந்தரமூர்த்தி சுவாமிகளையும், அடியார்களையும் உண்பித்தருளி மறைய சுந்தரர் இந்நடுப்பகலில் நம்பொருட்டு பிராமணர் வீடுகடோறும் சென்றிரந்து வந்தவர் சுவாமியே யெனத் திருவுங்ளகொண்டு மனமுருக உருக,

திருக்கச்சூராலக் கோயில் - பண் - கொல்லிக்கவ்வாணம்.

திருச்சிற்றம்பலம்.

மூதவாயோரிகதற முதுகாட்டெரி கொண்டாடன் முயல்வானே
மதுவார் கொன்றைப் புதுவீசூடும்மலையான்மகடன் மண
வாளா - கதுவாய்த்தலையிற் பலிகொள்ளக் கண்டாலடியார்
கவலாரே-யதுவேயாமாறி துவோகச்சூராலக்கோயிலம்மானே

அன்னமன்னும் வயல்சூழ்கச்சூ ராலக்கோயிலம்மானை — யுன்ன
முன்னு மனத்தாரூ ரூரான்பேர் முடிவைத்த - மன்னு
புலவன்வயனுவலர்க்கோன்செஞ்செ ஞவன்வன்றொண்டன் -
பன்னுதமிழ்நான்மாலைவல்லா ரவரென்றலைமேற்பயில்வாரே.

திருச்சிற்றம்பலம்.

என்று தோத்திரஞ் செய்துக் கொண்டு, உமாதேவியார் முப்பத்திரண் டறங்களை வளர்த்தருளியதும் முக்தி ஸ்தலங்களேழில் முதன்மையானதும், பிருதிவி ஸ்தலமானதும், தற்காலம் ரெயில்வே ஸ்டேஷனு யிருப்பதுமாகிய திருக்காஞ்சி க்ஷேத்திரத்தையடைந்து சித்தம்பரவசராய்.

திருக்கச்சி அனேக தங்கா பதம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தேனெய்புரிந்துழல் செஞ்சடையெம்பெருமான திடந்திகழைங்
கணைக்-கோனையெரித்தெரியாடி யிடங்குலவான திடங்குறை

யாமறையா - மானையிடத்ததோர் கையனிட மத மாறுபடம்
பொழியும் மலைபோ—லானை யுரித்த பிரானதி டங்கலிக்கச்சி
யனேக தங்காபதமே-

வீடுபெறப்பல வூழிகணின்று நினைக்குமிடம் வினை தீருமிடம்.பீடு
பெறப்பெரி யோரதிடங்கலிக் கச்சியனேகதங்காமணிடம்-
பாடுமிடத் தடியான் புகழூரனுரைத்த விம்மாலைகள்பத்தும்
வல்லார்-கூடுமிடஞ் சிவலோகனிடங் கலிக்கச்சியனேகதங்கா
பதமே்

திருச்சிற்றம்பலம்.

என்று பாடியருளி பின்னும் பல தலங்களையும் பாடி வணங்கிக் கொண்டு, சிலந்தி பாம்பு, யானை, இம்மூன்றும் பேறு பெற்றதும், வாயு ஸ்தல மாகியதும், தற்காலம் ரெயில்வே ஸ்டேஷனு யிருப்பதுமாகிய ஸ்ரீ- காளத்தியை யடைந்து சந்தோஷ சாகரத் தழுந்தி,

திருக்காளத்தி- பண் கட்ட ராகம்.

திருச்சிற்றம்பலம்.

செண்டாடும் விடையாய் சிவனேயென் செழுஞ் சுடரே
வண்டாடுங் குழலாளுமைபாக மகிழ்ந்தவனே
கண்டார் காதலிக்குங் கணநாதனெங் காளத்தியா
யண்டா யுன்னையல்லா லிறிந்தேத்த மாட்டேனே.

காராரும் பொழில்சூழ் கணநாத னெங்காளத்தியுள்
ளாரரவின் னமுதையணி நாவலூரன் சொன்ன
சீரூர் செந்தமிழ்கள் செப்புவார் வினையாயின போய்ப்
பேரா விண்ணுலகம் பெறுவார் பிழைப் பொன்றிலரே-

திருச்சிற்றம்பலம்.

என்று பாடித் துதித்து தற்காலம் சென்னப் பட்டணத்திற்கு வடக்கே 5- மைல் தூரத்தில் ரெயில்வே ஸ்டேஷனு யிருப்பதும், மஹா மகுத்வம் பொருந்தியதுமாகிய திருவொற்றியூர் என்னுஞ் சிவஸ்தலத்தை யடைந்து தேக புளகாங்கித முற்று சென்னிமே

லிரண்டு கரங்களையுங்குவித்து தெவிட்டாவின்பத்திலாழ்ந்து,

திருவொற்றியூர் பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பாட்டும்பாடிப் பரவித்திரிவா - ரீட்டும்வினைக டீர்ப்பான்கோயில்
காட்டுங்கலமுந் திமிலுங்கரைக்கே - யோட்டுந்திரைவா யொற்றியூரே.

ஒற்றியூருமரவும்பிறையும் - பற்றியூரும் பவளச்சடையா - னொற்றியூர்மே லூரானுரைத்த - கற்றுப்பாடக் கழியும்வினையே.

திருச்சிற்றம்பலம்.

என்று பாடித் துதித்து தேகபரவசராய் சிலநாளங்கு வீற்றிருந்தனர் நிற்க,

181461

முன் திருக்கைலாய கிரியில் சுந்தர மூர்த்தி சுவாமிகள் ஆசைகொண்ட தோழியரில் அநிந்திதையார் என்பவர் திருவொற்றியூருக்கு அதிசமீபத்திலுள்ள ஞாயிறு என்னு மூரில் ஞாயிருகிழார் என்னும் வேளாள குலோத்தமருக்கு புத்ரிரத்தினமாயுதித்து சங்கிலியார் என்னுந் திருநாமமுடையாராய் மகிமை விளங்க வளருநாளில், சிவபெருமானுக்குத் திருத்தொண்டு செய்வதற்கே பாத்திரராய் திருவொற்றியூர் திருக்கோயிலை யடைந்து ஸ்ரீ-வடிவுடையம்மை சமேதராய் விளங்குந் தியாகேசப் பெருமானுக்குத் திருத்தொண்டு செய்துவருநாளில் ஓர் நாள் சந்நிதியிலிருந்தசுந்தரர் சங்கிலியாரைக் கண்டு அவ்வம்மையாரைத் திருமண முடிக்க ஆசைகொண்டு அதே கவலையாய் கோயிலின் புறத்திலிருக்க ஒப்புயரற்ற பரமசிவம் சுந்தரமூர்த்திகளிடம்போய் சுந்தரா! யிம்பருலகில் வானவர்க்கு மெய்த வொண்ணுவிருந்தவத்துக், கொம்பை யுனக்குத்தருகின்றேம் ஆதலால் கொண்ட மனக்கவலையை மாற்றுகவென்றருளி உடனே கன்னிமாடத்திற் கண்வளரும் சங்கிலியாரின் கனவில் தரிசனமாய் சங்கிலியே! என்பால் அன்பு மிக்க சுந்தரனை நீமணக்கக்கடவா யென்றருள, சங்கிலியார் சுவாமியினுபைய சரணாரவிந்தங்களை தஞ்சிரசிற் சூட்டி எம்பிரானே! தேவரீர் கட்டளையை சிரசாய் வகித்தேன், ஆயினும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் மன்னுந் திருவாரூரின்க ணவர்தா மிகவு மகிழ்ந்துறைவ, தென்னுந்தன்மை யறிந்தருளும் என்றிறைஞ்சுங்கால், சுவாமி, சங்கிலியே! நீ யஞ்சற்க, சங்கிலியே!

"பொற்றொடியா யுனையிகந்து போகாமைக் கொருசபதம்
அற்றமுறு நிலைமையினாலவன் செய்வானென வருளி"

சங்கிலியாரை மன மகிழ்வித்து தம்மையே யெதிர் பார்த்திருக்கும் சுந்தரரிடஞ் சென்று சுந்தரா! "நீ சங்கிலியைவிட்டுப் பிரியேனென சபதஞ் செய்தாலவள் உன்னை மணந்திடுவாள்" என்றருள சுந்தரர், என்னுடைய நாயகனே! யானவளுடன் சபதஞ் செய்ய திருக்கோயிலுக்கு வருங்கால் தேவரீர், திருக்கோயிலை நீங்கி மகிழமரத்தின் கீழ் எழுந்தருள வேண்டுமென் றிரைஞ்ச சுவாமியும் அவ்வாறேயாகுக வென்றருளி மீண்டும் சங்கிலியாரிடமேகி, சங்கிலியே! சுந்தரன் கோயிலில் சபதஞ்செய்துக் கொடுப்பதாய் நின்னை யழைப்பானேல் நீயதற்குடன்படாது மகிழமரத்தின்கீழ் சபதஞ் செய்யும்படிக் கேளென மறைந்தருளினார். சங்லியார் உடனே நித்திரைதெளிந்தெழுந்து தம் மருகிலிருக்கும் பாங்கியருக்கு நிகழ்ந்த யாவற்றையுங் கூறி திருப்பள்ளி யெழுச்சிக்கு புட்பமாலைதொடுக்க பாங்கியரோடும் ஆலயத்திற்குச் செல்ல அதற்குமுன்னரேவந்து காத்துக்கொண்டிருந்த சுந்தர மூர்த்தி சுவாமிகள் சங்கிலியாரை நோக்கி பெண்ணே! நின்னை யான் திருமணமுடித்துக்கொள்ள இஷ்டமுளேன் என்னலும் சங்கிலியார் மிக்கநாணமுற்றவராய் ஒன்று முரையாது திருக்கோயிலினுட்செல்ல சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பின்றொடர, சங்கிலியார் கனவை முற்று -முணர்ந்திருந்த சேடியர் சுவாமி! தேவரீர் சங்கிலியாரை விட்டு நீங்குவதில்லையென சபதஞ்செய்யில் சங்கிலியா ரதற்குடன்படுவாரென சுந்தரர், அவ்வாறேயாயின் ஆலயத்தில் செய்து தருகிறேனென்ன அதற் கவர்க ளிசையாது மகிழ மாத்தின்கீழ் செய்யவேண்டுமென, அவரும் நாமிதை ஆக்ஷேபிக்கில் நம்கருத்திற்கு பங்கமாமெனக் கருதி அவர்களிஷ்டத்தின்வாறே மகிழ மரத்தின் கீழ் சங்கிலியாருக்கு நான் உன்னைப்பிரியேன் யென சபதஞ் செய்துக்கொடுத்து சங்கிலியாரோடு இனிது வாழ்ந்திருந்தனர்.

இவ்வாறு சிலகாலஞ் செல்ல ஒருநாள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூர் வீதிவிடங்கப்பெருமானை இன்னும் எத்தனை நாள் என் கண்கள் களிக்கக்காணு திருப்பே னெனக் கசிந்துருகி ஆலயத்துட் சென்று சிவபெருமானை துதித்துக்கொண்டு திருவொற்றியூர் எல்லையைக் கடந்தவுடனே தமதிரண்டு கண்களு மறைய, தாம்சபதந்தப்பினதினா லிவ்வாறுநேர்ந்ததென நடுநடுங்கி

திருவொற்றியூர் பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

அழுக்குமெய்கொடுன் றிருவடியடைந்தே னதுவு நான்படப்பால
தொன்றானாற் - பிழுக்கை வாரியும் பால்கொள்வரடிகேள்
பிழைப்பனாகிலுந் திருவடிப் பிழையேன் - வழுக்கிவீழினுந்
திருப்பெயரல்லான் மற்றுநானறி யேன்மறுமாற்ற - மொழு
க்கவென் கணுக் கொருமருந்துரையா யொற்றியூரெனு மூரு
றைவானே.

ஓதம்வந்துலவுங்கரைதன்மே லொற்றியூருறை செல்வனைநாளு
ஞாலந்தான்பர வப்படுகின்ற நான்மறையங்க மோதியநா
வன் - சீலந்தான்பெரிதும் மிகவல்ல சிறுவன்வன்றொண்ட
னூரனுரைத்த-பாடல் பத்திவைவல்லவர்தாம் போய்ப் பரகதி
திண்ண நண்ணுவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

என்றுருகிப் பாடியும் ஒளிபெறாது மனம் வருந்தியும், தாம்திருவா ரூருக்குப் போகவேண்டுமென்னும் பேராசையினால் சில சிவனடியார்களுதவியால் வழிகொண்டு தற்காலம் சென்னைக்குமேற்கில் 13 மைலிலிருக்கும் ஆவடிஸ்டேஷனுக்கு வடகிழக்கில் 2½ மைலிலிருக்கும் திருமுல்லைவாயில் ஸ்தலத்தையடைந்து கண்ணீராறாய் வடியக் கசிந்துருகி பதிகம்பாடி தற்காலம் திருவெவ்வளூர் ஸ்டேஷனுக்கு வடக்கில் 7 மைலிலிருக்கும் திருவெண்பாக்கம் சிவஸ்தலத்தை யடைந்து.

திருவெண்பாக்கம் - பண் - பழம் பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

மான்றிகழுஞ் சங்கிலியைத்தந்து வருபயன்களெல்லாந் - தோன்
றவருள் செய்தளித்தா யென்றுரைக்க வுலகமெல்லா- மீன்ற
வனேவெண்கோ யிலிங்கிருந்தாயேயென்ன - வூன்றுவதோர்
கோலருளி யுளோம்போகீரென்றானே.

வாரும்பொழில்கிலவு வெண்பாக்க மிடங்கொண்ட - காராரு மி
டற்றானைக் காதலித்திட் டன்போடுஞ்-சீராருந் திருவாரூர்ச்
சிவன்பேர்சென் னியில்வைத்த - வாரூரன் றமிழ்வல்லார்க்
கடையாவல் வினைதானே.

என்று விண்ணப்பிக்க, சுவாமியவருக்கோ ரூன்றுகோலருளி உளோம்போகீர் என்றனர்-பிறகு சுந்தரமூர்த்தி சுவாமிகள் இரத்னசபையை யுடையதும், சிவபெருமான் காளியுடன் நடனித்தருளியதும், காரைக்கா லம்மையார் தலையாலே நடந்துவந்து சிவபெருமான் திருவடிகளின் கீழ் சிவானந்த பெருவாழ்வடைந்ததும் தற்காலம் திருவாலங்காடு என்னும் ரெயில்வே ஸ்டேஷனுக்கு 3 மைல் தூரத்திலிருப்பது மாகிய திருவாலங்காடு என்னுஞ் சிவஸ்தலத்தையடைந்து திருப்பதிகமோதியருளி, திருக்காஞ்சியையடைந்து

திருவேகம்பம் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

ஆலந்தானு வந்தமுதுசெய்வானை யாதியையமர்தொழுதேத்துஞ்-
சிலந்தான் பெரிதும் முடையானைச் சிந்திப்பாரவர் சிந்தையு
ளானை - யேலவார்குழ லாளுமைநங்கை யென்றுமேத்திவழி
படப்பெற்ற - காலகாலனைக் கம்பனெம்மானைக் காணக்கண்
ணடி யேன்பெற்றவாறே.

பெற்றமேற்றுகந் தேறவல்லானை பெரியவெம்பெருமானென்றெப்
போதுங் கற்றவர் பரவப்படுவானைக் காணக்கண்ணடி யேன்
பெற்றதென்று - கொற்றவன்கம்பன் கூத்தனெம்மானைக்
குளிர்பொழிற்றிருநாவலூர - னற்றமிழிவை யீரைந்தும்வல்
லார் நன்னெறியுலகெய்து வர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

என்றுபாடித் துதித்து எகாம்பரநாதர் திருவருளா லோர் கண் பெற்று, மீண்டும் பலஸ்தலங்களையும் பாடிப்பாடி துதித்துக் கொண்டே திருவாரூரை யடைந்து வன்மீக நாதரை வணங்கி மற்றோர் கண்ணும் பெற்று, தாம் சங்கிலியாரை மணந்ததினிமித்தம் தம்மீது ஊடல் கொண்ட பரவையாரின் ஊடலைத்தணிக்க சுவாமியை பரவையாரிடம் இருமுறைதூதனுப்பி அவர் ஊடலைத்தணிவித்து அவருடனின்புற்று நாடோறும் வன்மீகநாதரை வணங்கிக் கொண்டுவந்தனர். நிற்க,

சுந்தர மூர்த்தி சுவாமிகள் பெருமானாரை பரவையார்பால் தூதனுப்பியதைக் கேட்டருளியதிருப்பெருமங்கலம் ஏயர்கோன் கலிக்காம நாயனார் தம்மீது மன வருத்தங் கொண்டிருக்கிறாரென சுந்தர மூர்த்தி சுவாமிகள் சுவாமியினிடம் விண்ணப்பிக்க சுவாமியும் கலிக்காம நாயனாருக்கு சூலை நோயை ஏவி. கலிக்காமா! இக்கொடிய நோய் சுந்தரனாலேயேகுணமாம் என்றவருக்குரைக்க அவ ருடன்படாமையைக்கண்டு சுந்தரரிடம் வந்து சுந்தரா! நீ போய வனுடைய சூலை நோயை நீக்கென்ன சுந்தர மூர்த்தி சுவாமிகள் அவ்வாணையை சிரசாக வகித்து கலிக்காம நாயனாரிடம் வர, அவர் வருகையை கலிக்காம நாயனார் பொறாராய் வாளினால் வயிற்றை வகிர்ந்துக் கொண் டுயிர் துறந்தனர்-இதைக் கேட்டருளிய சுந்தரரும் மனம் பதைத்து அவ்வாளினாலேயே தாமும் மடிய வாளெடுக்க உடனே சிவபிரானருளால் கலிக்காம நாயனார் உயிர்த்தெழுந்து சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருக்கரங்களைப் பற்றிக் கொள்ள இருவரும் உள்ளன்புடன் ஒருவரை யொருவர் தழுவிக் கொண்டு அதுமுத லிருவரும் வன்மீகநாதரை வணங்குவ ராயினர். நிற்க,

அருட்பெருஞ் சோதியாகிய சிவபெருமானால் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய அற்புதங்களை யுணர்ந்த சேரமான் பெருமானுய னார் தலையன்பினால் தூண்டப்பட்டு திருவாரூருக்கு வந்து சுந்தர மூர்த்திகளைக்கண்டு மெய்யன்புடன் வணங்க, அவரு மிவரைவ ணங்கி இருவரும் ஆலயத்துட் சென்று வன்மீக நாதரை துதித்த னர் பிறகு சுந்தர மூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமா னுய னாரை பரவையார்திருமாளிகைக் கழைத்துப்போய் நல்விருந்த ளித்து அவருடன் சிலகாலந் தங்கியிருந்து மற்றுஞ் சிவாலயங்களை வணங்கவேண்டுமென் றெண்ணி சேரமான் பெருமானுயனாரைத் தம்முட னழைத்துக்கொண்டு சோழநாட்டின் சிவாலயங்க ளியா வற்றையும் வணங்கி தேசபரவசராய் பாண்டி நாட்டிற்புகுந்து மது ரை முதலிய மஹாஸ்தலங்களைப் பூசித்து மீண்டுந் திருவாரூருக் கெழுந்தருளி வன்மீகநாதரை வணங்கி அங்கிருந்து புறப்பட்டு மற் றுஞ் சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டே தற்காலம்தஞ்சைக்கு வடக்கே 7 மைலிலிருப்பதாகிய திருவையாற்று சிவஸ்தலத்தை யடைய சித்தமுவந்து வருகையில் காவேரி யாறு பெருக்கெடுத்து கரை புரண்டு வருவதைக் கண்ட சுந்தர மூர்த்தி சுவாமிகள் சிவ பெருமானை தம திதைய கமலத்திற் சேர்த்து,

திருவையாறு-பண்-காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

பரவும்பரிசொன்றறியேனான் பண்டேயும்மைப் பயிலாதே - யிர
வும்பகலு நினைந்தாலு மெய்தநினைய மாட்டேனான் - கரவில
ருவி கமுகுண்ணத் தெங்கங் குலைக்கீழ்க் கருப்பாலை-யரவந்தி
ரைக்கா விரிக்கோட்டத் தையாறுடையவடிகளோ.

கூடியடியாரிருந்தாலுங் குணமொன்றில்லீர் குறிப்பிலீ - ரூடியி
ருந்து முணர்கிலே னும்மைத்தொண்ட னூரனேன் - றேடி
யெங்குங் காண்கிலேன் திருவாரூரேசிந்திப்ப - னூடேதிருக்
காவிரிக்கோட்டத் தையாருடைய வடிகளோ.

என்று பாடியருளி, வெள்ளத்தை நீக்கி வெள்ள வேணிப் பெருந் தகையை தரிசித்து, கொங்கு நாடடைந்து ஆங்குள்ள பல சிவ ஸ்தலங்களையும் பாடிப் பாடிப் பணிந்து, மலை நாட்டிற் சென்ற போது சேரமான் பெருமானுயனாரின் நன்னகர மாகிய கொடுங் கோளூரையணைய ஆங்கிருப்பவர்அக மகிழ்ந்து அஞ்சலி யஸ்தராய் எதிர் கொண்டழைக்க அவர்களுடன் பரசுராமர் தாயைக்கொன்ற பாவந் தீர தவஞ் செய்த ஸ்தலமானதும், தற்காலம் சோரனூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு தென்மேற்கில் 40 மைல் தூரத்தி லிருப்பதுமாகிய திருவஞ்சைக்களம் என்னுஞ் சிவஸ்தலத்தை யடைந்து முடிப்பது கங்கையென்றெடுத்துப் பிறைகொண் முடி யார் தமைப் பாடிப் பரவி சேரமான் பெருமானுயனாருடன் தொழுதிறைஞ்சி அவருடன் அவர்திருமாளிகை சென்று திருவ முது செய்து மிக்க சந்தோஷத்துட னிருந்தார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமாணயனாரிடம் விடைபெற்றவரும் போது அவர்தம் பொக்கிஷத்திலிருந்த நிதிக்குவிய லவ்வளவையும் ஆட்கள் தலையிற் சுமத்தி யவருட னனுப்பயாவரும், முருகக்கடவுள் பூசித்த ஸ்தலமாயும், தற்காலம் திருப்பூர் ரெயில்வேஸ்டேஷனுக்கு வடக்கில் 5 மைலிலிருப்பதுமாகிய திருமுருகன் பூண்டி. என்னுஞ் சிவஸ்தலத்தை சமீபிக்கையில் பெருமானார் ஓர் திருவிளையாடல் செய்யக்கருதி தமது பூதங்களையேவ அவைகள் வேடருருக்கொண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகளுடன் கொண்டுவரும் பொருளனைத்தையுஞ் சூரையாடி சுவாமியின் சந்நிதானத்தில் சேர்த்தன. இதைக்கண்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிறிதுஞ் சலனமிலாது சிவாலயத்துட் சென்று,

திருமுருகன் பூண்டி—பண்-பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

கோடுகு வெஞ்சிலை வடுக வேடுவர் விரவலாமை சொல்லித் திடுகு
மொட்டெனக் குந்திக்கூறை கொண்டா றலைக்கு- மிடம்—
முடுகு நாறிய வடுகர் வாழ்முருகன் பூண்டி மாநகர்வா யிடுகு
நுண்ணிடை மங்கை தன்னொடு மெத்துக் கிங்கிருந்தீ ரெம்
பிரானீரே.

முந்திவானவர் தாந்தொழு முருகன்பூண்டி மாநகர்வாய்ப் - பந்
தணைவிரற்பாவைதன்னையொர் பாகம் வைத்தவனைச்— சிந்தை
யிற்சிவ தொண்டனூர னுரைத்தன பத்துங் கொண்-டெந்தம்
மடிகளை யேத்துவாரிட ரொன்றுந் தாமிலரே

என்று பாடி யருளியவுடன் களவு போன பொருள்க ளியாவும் கோபுர வாயிலில் நிறைந்திருக்க அவைகளை ஆட்களிடமனுப்பி விட்டு சுவாமி தரிசனஞ் செய்துக் கொண்டு கொங்கு நாட்டைக் கடந்து திருவாரூரை யடைந்து சிவ பெருமானை தொண்டுசெய் தொழுகுவா ராயினர்.

இவ்வாறு சிலகாலஞ் செல்ல சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமா ணயனாரைக்காணக் கருதி, தற்காலம் திருப்பூர் ரெயில்வேஸ்டேஷனுக்கு வடக்கில் 8 மைலிலிருக்கும் அவிநாசி தலத்திற் கருகில் வீடுகளில்லாது கொல்லை வெளியாயிருக்கும் திருப்புக்கொளியூரை யடைந்து ஆங்கொரு வீட்டில் அழுகையும் மற்றொரு வீட்டில் மங்கலவாத்தியத்துடன் சந்தோஷமா யிருப்பதையுங்கண்டு ஆங்கிருப்பவர்களை விசாரிக்க, அவர்கள் ஐயனே! இவ்வீட்டிலொரு பிள்ளையும், அவ்வீட்டிலொரு பிள்ளையும் நீராடக் குளத்திற்கு சென்று ஒரு பிள்ளை முதலைக் கிரையாய், ஒரு பிள்ளை தப்பிவந்தது. தப்பிவந்த பிள்ளைக்கு இன்று உபநயனச் சடங்கு நிறைவேறுவதால் இங்கு சந்தோஷமும், இறந்தபிள்ளை வீட்டில் துக்கமுங் கொண்டாடுகிறார்களென்ன உலகுபகாரம் ஞானிகள் விவகாரமாதலால் இதைக் கேட்டருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு திருவுள மிரங்கி.

தேவாரம் பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

உரைப்பாருரையுகந் துள்கவல்லார் தங்களுச்சியா - யரைக்கா டரவாவாதியுமந்த முமாயினாய் - புரைக்காடுசோலைப் புக்கொளியூரவிநாசியே - கரைககான் முதலையைப் பிள்ளைதரச்சொல்லுகாலனையே.

நீரேற வேறு நிமிர்சடைநின்மல மூர்த்தியைப் - போரேற தேரியைப் புக்கொளியூரவிநாசியைக் - காரேறு கண்டனைத் தொண்டனாரூரன் கருதிய - சீரேறு பாடல்கள்சொல்லவல்லார்க்கில்லை துன்பமே.

திருச்சிற்றம்பலம்.

என்றோதியபோதே மதலையையுண்ட முதலை அப்பிள்ளையைக்கரையில்விட அப்பிள்ளையைக்கண்ட பெற்றோர் பிள்ளையை யணைத்துக்கொண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாதத்தை பணிந்து சந்தோஷசாகரத்தில் மூழ்கிக் கரையேற வலியிலராயிருக்கையில் சுவாமிகளப் பிள்ளையை அவிநாசிக்கழைத்துப்போய் சிவதரிசனஞ் செய்து திருப்பதிகம்பாடி யருளி பின்பந்தபிள்ளைக்கு உபநயனச்சடங்குகளியற்றியருளி மகோதை யென்னு மஹாஸ்தலத்திற் சென்றிருக்கையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் மீண்டுந் திருவஞ்சைக்களத்தையடைந்து கண்ணீருராய் வடிய கைம்மலர் குவித்து தசிர் திருகித் துதித்து நீந்தற் கரிய உலக வாழ்வென்னும் இம்மாய வாழ்வினை யொழித்து தேவரீர் திருவடிக்காளாக்க வேண்டுமென்னுங் கருத்தாய்.

திரு அஞ்சைக்களம் பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தலைக்குத் தலைமாலை யணிந்ததென்னே சடைமேற் கங்கை வெள்ளந் தரித்ததென்னே-யலைக்கும் புலித்தோல் கொண்டசைத்ததென்னே யதன்மேற் கதநாகக்க சார்த்ததென்னே - மலைக்கு நிகரொப்பன வன்றிரைகள்வலித்தெற்றி முழங்கிவலம்புரி கொண்-டலைக்குங் கடலங் கரைமேன் மகோதை யணியார் பொழில்சூ ழஞ்சைக்களத்தப்பனே

எந்த மடிகளிமையோர்பெருமா னெனக்கென்றுமளிக்கு மணிமிடற்ற - னந்தண்கடலங்கரைமேன் மகோதையணியார் பொழிலஞ்சைக் களத்தப்பனை- மந்தமுழவுங்குழலு மியம்புவளநாவலர்கோ னம்பியூரன்சொன்ன-சந்தமிகு தண்டமிழ் மாலைகள்கொண்டடிவீழ வல்லார் தடுமாற்றிலரே

திருச்சிற்றம்பலம்.

என்னுந் திருப்பதிகம் பாடி யருளியதை அடியார்க் கெளியராம் அருட்பெருஞ்சோதி பிரமனாதிய தேவர்களைநோக்கி நம்முடைய தோழனாகிய சுந்தரனை வெள்ளையானைமீதேற்றிக் கொண்டுவா

18461

ருங்களென, அவர்களுடனே புறப்பட்டு திருக்கோயிலி லிருந்து நீங்கும் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு சிவாக்கினையைத் தெரிவிக்க அவர் இவ்வெளியேன் ஈடேறுநா ளிதுவேயென்று ஆநந்தக் கடலிலாழ்ந்து வெள்ளையானையின்மீதாரோகணித்து தம்முடைய தோழர் சேரமான் பெருமாணாயனாரை நினைத்துச் செல்ல அஃதுணர்ந்த நாயனார் ஓர் அஸ்வமீதெழுந்தருளி திருவஞ்சைக்களத்தையடைந்து குதிரையின் காதில் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை யோத அதுவும் ஆகாயத்திலெழும்பி சுவாமிகள் வெள்ளையானையை வலம் வந்து அதற்கு முன்சென்றது சேரமான் பெருமாணாயனாருடன் வந்த வீரர்களவரை ஆகாயத்திற் கண்ணுக் கெட்டியவரையில் தரிசித்து பிறகு காணாராய் மயங்கிதத்தம் உடைவாளால் உடலைப் போக்கி வீரயாக்கையைப் பெற்று அவரை அஞ்சலிசெய்துக்கொண்டே அவருக்கு முன்போயினர்.

சேரமான் பெருமாணாயருக்குப்பின் சென்ற சுந்தர மூர்த்திசுவாமிகள்.

திருநொடித்தான் மலை - பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

தானெனைமுன்படைத்தான்தறிந்துதன்பொன்னடிக்கேநானென
பாடலந்தோ நாயினேனைப் பொருட் படுத்தி-வானெனை வந்
தெதிர்கொள்ள மத்த யானையருள்புரிந்-தூனுயிர்வேறுசெய்
தா னொடித்தான் மலையுத்தமனே.

ஊழிதோ றூழிமுற்று முயர்ந்தபொன்னொடித்தான்மலையைச்-
சூழிசையின் கரும்பின் சுவை நாவலவ்வூரன் சொன்ன- வேழி
சையின்றமிழா விசைந் தேத்திய பத்தினையு-மாழி கடலரைய
ரஞ்சையப் பர்க்கறிவிப்பதே

திருச்சிற்றம்பலம்.

என்னுந் திருப்பதிகமோதி ஸ்ரீ - கைலாயத்தின் தெற்கு வாயிலிலிறங்கி இருவரும் சுவாமியை நமஸ்கரித்து பழையபடி தத்தந்திருத்தொண்டு செய்வாராயினர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் வழியிற்பாடியருளி தேவாரங்களை வருணராஜனிடங்கொடுத்தருள அவனதை திருவஞ்சைக் களத்தில் கொண்டுபோய் விளக்கினன்.

பூலோகத்தி லவதரித்த பரவையாரும், சங்கிலியாரும் திருக்கைலையடைந்து அம்மனுக்குத்திருத் தொண்டு செய்வாராயினர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் வயது 18.

ஆடி௴ சுவாதி நக்ஷத்திரம் முக்தியடைந்தநாள்.

**ஸ்ரீ-சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருவடிகளே சரணம்,**

**சுபம்! சுபம்!! சுபம்!!!**

சம்பூரணம்.

உ

சிவமயம்.

# விண்ணப்பம்.

எல்லாஞ் சிவமயமென் றிதையம் பூத்தொளிருஞ் சிவநேயச் செல்வர்கள் முன் எங்கல் விஷயத்தையும் எத்தனை முறையெடுத்தாளினு மிழிவாகாதென வெண்ணியே என்னு லெண்ணவு மியலா இச்சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரிதத்தை யெழுதினேன். இஃது முற்றுஞ் சிவத்தியானமே யாதலால் எதற்கும் அஞ்சா நெஞ்சினனாயினேன். இதைக் கண்ணுறுங் கண்ணியர் இதிற் காணுங் குறைகளை மறுபதிப்பிற் களைவார்களென்னும் பேரவாக்கொண்டு வந்தனத்துடன் வழிபார்க்கின்றேன்.

ஆக்கியோன்.

9A
11-11